

கோவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி இடங்களை அதிகாரிகளுடன் அமைச்சர் செந்தில்பாலாஜி 3 வது நாளாக ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், கோவை மாநகர் தி.மு.க. மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், மேயர் ரங்கநாயகி, கணபதி ராஜ்குமார் எம்.பி., துணைமேயர் வெற்றிச்செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், மாவட்ட துணைச்செயலாளர் அசோக் ஆறுக்குடி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு அமைச்சர் க.பொன்முடி தலைமையில் எழுச்சியான வரவேற்பு!

### தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு பொன்.கௌதமசிகாமணி வேண்டுகோள்!



விழுப்புரம், நவ. 5-

விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இன்று (05.11.2024) விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று மாலை 4 மணிக்கு திருவெண்ணெய்நல்லூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவச் சிலையை திறந்து வைக்க உள்ளார். நாளை (06.11.2024-புதன்கிழமை) காலை 9.30 மணிக்கு விழுப்புரத்தில் இளைஞர் அணி சார்பில் அமைக்கப் பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைக்க உள்ளார்.

மேற்காணும் நிகழ்வுகளில் பங்கேற்க வரும் துணை முதலமைச்சர் அவர்களுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் இன்று (05.11.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 3.00 மணிக்கு விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகில் கழக துணைப் பொதுச்செயலாளர் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

விழுப்புரம் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்ட ஒன்றிய பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் துணை முதல மைச்சர் அவர்களின் வரவேற்பு நிகழ்வில் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஆ.இராசா.எம்.பி – அமைச்சர் சா.சி.சிவசங்கர் – தொகுதிப் பார்வையாளர்கள் பங்கேற்பு!

# பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், நவ. 5-

பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பெரம்பலூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் இன்று (05.11.2024 -செவ்வாய்க்கிழமை) மாலை 3.00 மணியளவில், பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் (எனது) தலைமையில், கே.என்.அருண்நேரு. எம்.பி.,

சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

அது சமயம், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:- கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெரம்பலூர் வருகை!

தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம்.

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. மண்டலம் 1, 2, 3, 4, 8 – ஐ சேர்ந்த நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 7–க்கு உட்பட்ட மாவட்ட – மாநகர – மாநில நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மாநில துணைச் செயலாளர் முன்னிலையில், கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | இடம் |
|---|---|---|---|
| 05/11/2024 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | 7 | கலைஞர் அறிவாலயம், எம்.கே.மூப்பனார் சாலை, ரயிலடி அருகில், தஞ்சாவூர். |
| | மாலை 4.00 மணி | | கோகோஸ் மஹால், காவிரி தென்கரை, புதுஅக்ரஹாரம் திருவையாறு, தஞ்சாவூர். |

மண்டலம் 7 – ஐ சேர்ந்த மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், தவறாமல் இப்பயிற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 04–11–2024.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை! ஓ.ஏ.நாகலிங்கம் ஆலோசனை வழங்குகிறார்!

# வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக் கழக கலந்தாலோசனைக் கூட்டம்!

### தயாநிதி மாறன் - அ.வெற்றிஅழகன் பங்கேற்பு! கூ.பீ.ஜெயின் - வே.வாசு அறிக்கை!

சென்னை, நவ. 5-

வில்லிவாக்கம் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கூ.பீ.ஜெயின் எம்.சி. மற்றும் வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (5.11.2024 செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணிக்கு, வில்லி வாக்கம், எம்.டி.எச்.சாலையில் அமைந்துள்ள டி.கே.ஏ. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்திற்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு வில்லிவாக்கம் தொகுதிப் பார்வையாளர் ஓ.ஏ.நாகலிங்கம் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

எனவே இக்கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கூ.பீ.ஜெயின் எம்.சி. மற்றும் வில்லி வாக்கம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு ஆகியோர் அறி விப்பில் தெரிவித்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு. சுலைமான்

### நவம்பர் 5 (1983)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### அமெரிக்க அதிபர் தேர்தல்:

# கருத்துக்கணிப்பில் டிரம்பை முந்தும் கமலா ஹாரிஸ்!

வாஷிங்டன், நவ. 5–

அமெரிக்க அதிபர் தேர்தல் இன்று நடைபெறும் நிலையில், அங்கு நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் டிரம்பை காட்டிலும் கமலா ஹாரிஸ் முன்னிலை வகிக்கிறார். நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அமெரிக்க அதிபர் தேர்தல் இன்று (நவ. 5 – இந்திய நேரப்படி நவ. 6) நடைபெறுகிறது. ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் துணை அதிபர் கமலா ஹாரிசும் (60), குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்பும் (78) போட்டியிடுகின்றனர். அதேபோல் பிற கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர். தற்போது டிரம்பும், கமலாவும் இறுதிக்கட்ட பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அமெரிக்க அதிபர் தேர்தல் தொடர்பாக தேசிய அளவிலும் மாகாண அளவிலும் கருத்துக் கணிப்புகள் வெளியாகி வருகின்றன. தேசிய அளவில் சில கருத்துக்கணிப்புகள் கமலாவுக்கு ஆதரவாகவும், வேறு சில கருத்துக்கணிப்புகள் டிரம்புக்கு ஆதரவாகவும் உள்ளன.

எனினும் பெரும் பாலான கணிப்புகளில் இருவருக்கும் இடையிலான வாக்கு சதவீதத்தின் இடைவெளி ஒரு சதவீதமாக உள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தலில் வாக்குப்பதிவு நாளுக்கு முன்பாகவே பொதுமக்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்ய முடியும். இதன்படி தேர்தலுக்கு முன்பாக இதுவரை 6.5 கோடி பேர் தங்கள் வாக்கினை பதிவு செய்துள்ளனர். அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹாரிசுக்கோ, குடியரசு கட்சி வேட்பாளர் டிரம்புக்கோ வாக்காளர்கள் நேரடியாக வாக்களிக்கமாட்டார்கள். அதற்குப் பதிலாக 'எலக்டோரல் காலேஜ்' (வாக்காளர் குழு) உறுப்பினர்களுக்கு வாக்களிப்பார்கள்.

அமெரிக்காவில் உள்ள 50 மாகாணங்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப வாக்காளர் குழு உறுப்பினர்கள் இருப்பார்கள். ஒட்டுமொத்தமாக 538 வாக்காளர் குழு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் குறைந்தது 270 உறுப்பினர்களின் ஆதரவை பெறும் வேட்பாளரே, அதிபர் தேர்தலில் வெற்றி பெற முடியும். வாக்குப்பதிவு நிறைவடைந்த பிறகு அன்றிரவு 50 மாகாணங்களிலும் வாக்குகள் எண்ணப்படும். பெரும்பாலும் அன்றிரவே அமெரிக்காவின் புதிய அதிபர் யார்? என்பது தெரியவரும். கடந்த 2020ம் ஆண்டு அதிபர் தேர்தலின் போது யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் இழுபறி நீடித்தது. இதனால் சில நாட்களுக்குப் பிறகே ஜோ பைடனின் வெற்றி உறுதி செய்யப்பட்டது.

சமீபத்திய கருத்துக் கணிப்பின்படி, புகழ்பெற்ற 'டெஸ் மொயின்ஸ் ரிஜிஸ்டர்' செய்தித்தாள் வெளியிட்ட அறிக்கையின்படி கமலா ஹாரிசுக்கு 47% ஆதரவும், டிரம்புக்கு 44% ஆதரவும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்த வாக்கெடுப்பை நடத்திய செல்சர் அண்ட் கோ நிறுவனத்தின் தலைவர் ஜே.ஆன் செல்சர் கூறுகையில், 'இருவரில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது பெரும் சவாலாக உள்ளது. இன்றைய நிலையில் கமலா ஹாரிஸ் முன்னிலையில் உள்ளார். ஆனால் கடந்த செப்டம்பரில் நடத்திய வாக்கெடுப்பில் கமலா ஹாரிஸை விட நான்கு புள்ளிகள் டிரம்ப் முன்னிலை வகித்தார்' என்றார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை வி.தேவதாசன்

### நவம்பர் 5 (2019)



இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, பின்னர் கழகம் துவக்கப்பட்டபோது, அதில் இணைத்துக் கொண்டதோடு, 1951–ல் மும்பையில் குடியேறி, அம்மாநில கழக முன்னணித் தோழர்களுடன் இணைந்து பணியாற்றியவர்.

முதன்முதலாக, தான் வசித்து வந்த பாண்டுப் பகுதியில் கிளைக் கழகத்தை துவக்கி, அதன் செயலாளராக பணியாற்ற தொடங்கி, மும்பை புறநகர் மாநிலக் கழகத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தார்.

மும்பையில் திருவள்ளுவர் மன்றம் தொடங்கி, அதன் மூலம் தமிழ் வளர பாடுபட்டதோடு, திருவள்ளுவர் சிலையினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைக் கொண்டு திறந்து வைத்ததோடு, கலைஞரின் 'குறளோவியத்தை' இந்தி மொழியாக்கம் செய்து வெளியிட்டார்.

2018ஆம் ஆண்டு நடந்த முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் 'பெரியார் விருது' பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**